**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**S.C.No. 223/2020**

**Prosecution Witness P.W. 4**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.விஜயகுமார் | Calling | : டிரைவர் |
| Father's name | : திரு. சோமு | Religion | : இந்து |
| Village | : சின்னக்கண்மாய் | Age | : 46 |
| Taluk | : மதுரை | | |

நாள் - **15.09.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் சின்னக்கண்மாய் ஏரியாவில் குடியிருக்கிறேன். நான் டிரைவராக பணியாற்றி வருகிறேன். அழகர் ஆனைமலையான் வேன் சர்வீசில் டிரைவராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் கம்பெனி வண்டியை கீழவாசல் பாத்திரக்கடை அருகே வண்டியை நிறுத்திவிட்டு சென்றுவிட்டோம். மறுநாள் பார்த்த போது வண்டியில் கண்ணாடி சேதம் ஆகியிருந்தது. அதன் சேதமதிப்பு சுமார் ரூ.1,500/- இருக்கும். வண்டியை யார் சேதப்படுத்தியது என்று தெரியாது. எங்கள் வண்டிக்கு அருகே நிப்பாட்டி இருந்த வண்டிகளும் சேதம் ஆகியிருந்தது. இதுசம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள். இந்த வழக்கில் யார் சேதப்படுத்தியது, எதற்காக சேதப்படுத்தினார்கள் என்ற விபரங்களை நான் கேள்விப்படவில்லை. போலிஸ்விசாரணையிலும் வண்டியை சேதப்படுத்திய நபர்கள் யார் என்ற விபரங்களை சொல்லவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்த போது, ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக 05.05.2018ம் தேதி இரவு 11.00 மணியளவில் நாங்கள் நிப்பாட்டி இருந்த

வண்டிகளை இரும்புகம்பியால் இருசக்கரவாகனத்தில் வந்து சேதப்படுத்தியதாகவும், அந்த விபரங்களை நான் கேள்விப்பட்டு போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.16 10:13:22 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W. 5**

.....

Name : திரு.சமயமுருகன் Calling : டிரைவர்

Father's name : திரு. தங்கவேல் Religion : இந்து

Village : கருவனூர் Age : 56

Taluk : மதுரை

நாள் - **15.09.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் கருவனூரில் குடியிருந்து வருகிறேன். நான் சொந்தமாக வேன் வைத்திருந்தேன். இப்போது டிரைவராக பணியாற்றி வருகிறேன். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் கீழவாசல் பாத்திரக்கடை அருகே நிப்பாட்டி இருநத் வண்டியின் கண்ணாடி உடைந்திருந்தது. அதன் சேதமதிப்பு ரூ.3,500/- இருக்கும். என் வண்டியை சேதப்படுத்தியது யார் என்று கேள்விப்படவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலிசார் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. போலிசார் கையொப்பம் செய்தது குறித்து என்னை விசாரிக்கவில்லை. பார்வைமகஜரில் உள்ள எனது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்த போது, ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக 05.05.2018ம் தேதி இரவு 11.00 மணியளவில் நாங்கள் நிப்பாட்டி இருந்த வண்டிகளை இரும்புகம்பியால் இருசக்கரவாகனத்தில் வந்து சேதப்படுத்தியதாகவும், அந்த விபரங்களை நான் கேள்விப்பட்டு போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும், சம்பவ

இடத்தை போலிசார் என் முன்பாக பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்தனர் என்றும், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.16 10:13:43 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.223/2020**
**Prosecution Witness P.W. 6**

.....

Name : திரு.வீரபாண்டி Calling : டிரைவர்

Father's name : திரு.போஸ் Religion : இந்து

Village : காமராஜர்சாலை Age : 43

Taluk : மதுரை

நாள் **- 15.09.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

<u>முதல் விசாரணை:</u>

நான் மதுரை காமராஜர் சாலையில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக வேன் உள்ளது. அதன் பதிவெண் TN 64 Q 8323 ஆகும். அந்த வண்டியை கீழவாசல் அருகில் நிறுத்திவிட்டு மறுநாள் வந்து பார்த்த போது, வண்டியின் கண்ணாடி சேதம் அடைந்திருந்தது. அதன் சேதமதிப்பு ரூ.1,500/- இருக்கும். அந்த வண்டியை சேதப்படுத்தியது யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள எனது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் என்ன விபரம் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாது. போலிசார் என் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்த போது, ஆஜர் எதிரிகள் முன்விரோதம் காரணமாக 05.05.2018ம் தேதி இரவு 11.00 மணியளவில் நாங்கள் நிப்பாட்டி இருந்த வண்டிகளை இரும்புகம்பியால் இருசக்கரவாகனத்தில் வந்து சேதப்படுத்தியதாகவும், அந்த விபரங்களை நான் கேள்விப்பட்டு போலிஸ்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும், சம்பவ

இடத்தை போலிசார் என் முன்பாக பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்தனர் என்றும், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.16 10:13:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 223/2020**
**Prosecution Witness P.W. 7**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வேல்முருகன் | Calling | : டிரைவர் |
| Father's name | : திரு. தங்கவேல் | Religion | : இந்து |
| Village | : சிலைமான்புளியங்குளம் | Age | : 60 |
| Taluk | : மதுரை | | |

நாள் - **15.09.2025**
**(எதிரிகள் ஆஜர்)**
**முதல் விசாரணை:**

நான் சிலைமான் புளியங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ளது என் கையெழுத்து தான், காவல்துறையினர்கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். போலிசார் என் முன்னிலையில் யாரையும் கைத செய்யவில்லை, வாக்குமூலம் வாங்கவில்லை, எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை. ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள எனது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.**4 ஆகும், அத்தாட்சியில் உள்ள எனது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.**5 ஆகும்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரித்த போது, 15.05.2018 ம் தேதி காலை 9.15 மணியளவில் மதுரை டவுன், காமராஜர் சாலை, அரசமரம் பிள்ளையார்கோவில் அருகே கிருஷ்ணாபுரம் 2 வது தெருவில் நானும், சாட்சி ரமேஷ் என்பவரும பேசி கொண்டிருந்த போது, விளக்குத்தூண் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு எண்.260/2018 ல் எதிரிகளான மணி என்ற மணிகண்டன், லோகேஸ்வரன், த/பெ. ராஜேந்திரன் ஆகியோரை விசாரித்ததாகவும், அப்போது எதிரிகள் தானாக முனவந்துகொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், அதனடிப்படையில் எங்களை அழைத்து சென்றால் வாகனத்தை சேதப்படுத்த பயன்படுத்திய இரும்புகுழாயை எடுத்து தருவதாக சொல்லி, காமராஜபுரம், இந்திரா நகர் கழிவுநீர்கால்வாய் அருகே அழைத்து சென்று, எடுத்து

ஆஜர் செய்த இரும்புகுழாயை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை - இல்லை (வழக்கறிஞர் ஆஜர்).

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.09.16 10:14:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.